# திருத்தங்கல் நகராட்சி
## சாதாரண கூட்டம்

நிகழும் விகாரி வருடம் புரட்டாசி திங்கள் 13 ம் நாள் **30–09–2019** ம் தேதி திங்கட்கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். ஜெயந்தி**

திருத்தங்கல் நகராட்சி
நாள் .26 –09–2019

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

பொருள்–358

திருத்தங்கல் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு நிதி திட்டம் 2019-2020-ன் கீழ் இந்நகர் பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.600.00 (ரூபாய் ஆறுநூறு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து மேற்படி மதிப்பீட்டுத் தொகையை அரசு மானியமாக பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி திட்ட கருத்துரு தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 03 பெரியார் காலனி, வார்டு எண். 05 முருகன் காலனி, வார்டு எண். 06 பதுவை நகர், கடம்பன் குளம் கண்மாய் ரோடு வார்டு எண். 08 சத்யா நகர் மற்றும் வார்டு எண். 18 வண்ணான் குளம் ஆகிய பகுதிகளில் மழைநீா் வடிகால்களுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி | 200.00 |
| 2 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 01 19-கண் பாலம், வார்டு எண். 12 எஸ்.என்.புரம் மெயின் ரோடு குறுக்குத் தெரு மற்றும் வார்டு எண். 18 சுக்கிரார்பட்டி மெயின் ரோடு குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீா் வடிகால்களுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி | 200.00 |
| 3 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 18,19 மேல ரத வீதி, வார்டு எண். 20 வடக்கு ரத வீதி வார்டு எண். 21 ஸ்டாண்டர்டு காலனி குறுக்கு தெரு, வார்டு எண். 04 ஏ.ஜே நகர், முத்துமாரியம்மன் காலனி வார்டு எண். 08 மகாத்மா காந்தி நகர் மற்றும் வார்டு எண். 13 - 32 வீட்டுக்காலனியில் மழைநீா் வடிகால்களுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி | 200.00 |
| | **மொத்தம்** | **600.00** |

அலுவலக குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1995/2019/இ1

பொருள்–359

இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு சோப்பு வீதம் ஜீலை **2018** வரை வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் ஆகஸ்ட்/2018 முதல் செப்டம்பர் **2019** வரை **14** மாதங்களுக்கு ஒரு குளியல் சோப்பு வீதம் **443** எண்ணம் குளியல் சோப்பு ஏதேனும் ஒரு கூட்டிடுறவு நிறுவனம் மூலம் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **20,000/–க்கு** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். /2019/எச்1

பொருள்–360

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன ஓட்டுனர் அறிக்கையின் படி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN67 L3265 மினி லாரிக்கு 20/11/2019ல் தகுதிச் சான்றிதழ் முடிவடைய உள்ளதால் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொண்டு தகுதிச் சான்றிதழ் பெற ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 70,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு–
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். /2019/எச்1)

பொருள்–361

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் அலுவலக உதவியாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர், மற்றும் ஓட்டுனர்களுக்கு ஒவ்வொரு வருடமும் சீருடை மற்றும் காலணிகள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 27/10/2019ல் தீபாவளி பண்டிகையை முட்டு மேற்படி பணியாளர்களுக்கு சீருடை காலணிகள் ஏதேனும் ஒரு கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3.00 லட்சத்திற்கும், மேலும் சீருடைகளை தைப்பதற்கு (Stitching charges) ஆண்களுக்கு ரூ. 800/– பெண்களுக்கு ரூ. 80/–ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்./2019/எச்1

பொருள்–362

திருத்தங்கல் நகராட்சியில் தற்சமயம் மானூர் கூட்டுக் குடிநீர் திட்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் குளோரின் இயந்திரம் பொருத்தப்பட்டு அதன் மூலம் குளோரினேசன் செய்யப்பட்டு 8.00 இலட்சம் லிட்டர் மற்றும் 7.00 இலட்சம் லிட்டர் நீர்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் பம்பிங் செய்யப்படுகிறது. இந்நிலையில் தற்சமயம் நகர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் காணப்படுவதால் பொதுமக்களுக்கு நோய் தொற்றுகள் ஏற்படாத வண்ணம் தடுக்கும் பொருட்டு பாப்பன் குளம் அருகில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் புதிதாக குளோரின் கருவி பொருத்த ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2267/2019/இ1

பொருள்–363

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.21 ஸ்டாண்டர்டு காலனியில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தின் அருகாமையில் உள்ள குடியிருப்புகளுக்கு தற்சமயம் நிலவிவரும் குடிநீர் பற்றாக்குறையின் காரணமாக சரிவர குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலையுள்ளது. எனவே அப்பகுதி மக்களின் குடிநீர் அத்தியாவசிய அவசியம் கருதி இந்நகராட்சிக்கு சொந்தமாக பூங்கா இடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,60,000/- (ரூபாய் மூன்று இலட்சத்தி அறுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2267/2019/இ1

பொருள்–364

திருத்தங்கல் நகராட்சியில் தற்சமயம் மானூர் கூட்டுக் குடிநீர் திட்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் குளோரின் இயந்திரம் பொருத்தப்பட்டு அதன் மூலம் குளோரினேசன் செய்யப்பட்டு 8.00 இலட்சம் லிட்டர் மற்றும் 7.00 இலட்சம் லிட்டர் நீர்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் பம்பிங் செய்யப்படுகிறது. இந்நிலையில் தற்சமயம் நகர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் காணப்படுவதால் பொதுமக்களுக்கு நோய் தொற்றுகள் ஏற்படாத வண்ணம் தடுக்கும் பொருட்டு நாடார் நந்தவனத் தெருவில் உள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் புதிதாக குளோரின் கருவி பொருத்த ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2267/2019/இ1

பொருள்–**365**

திருத்தங்கல் நகர் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பை கழிவுகள் அனைத்தும் தற்சமயம் சிவகாசி - விருதுநகர் மெயின் ரோடு சினிவாச பைன் ஆர்ட்ஸ் எதிர் புறம் உள்ள இடத்தில் சேகரம் செய்யப்பட்டுவருகிறது. மேற்படி கழிவுகளில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவதினால் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகளுக்கு பெரும் இடையூராக உள்ளது. மேலும் குப்பைகள் காற்றில் பறந்து சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்துகிறது. எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்துதலின் பெயரில் மேற்படி குப்பைகள் சேகரம் செய்யப்படும் இடத்தினை சுற்றி செட் அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2265/2019/இ1

பொருள்–**366**

திருத்தங்கல் நகராட்சியில் தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்று இரண்டாண்டு நிறைவு பெறுவதனை முன்னிட்டு தினகரன் நாளிதழில் தமிழக அரசின் இரண்டாண்டு சாதனை சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளதனை தொடர்ந்து இந்நகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுறையின் படி 2017-18, 2018-19 ஆண்டிற்கான வளர்ச்சிப் பணிகள் விபரம் மற்றும் எதிர்கால திட்டமிடல் தொடர்பான விளம்பர அறிவிப்பு தினகரன் நாளிதழில் 08.03.2019-ம் தேதியன்று வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் KAL PUBLICATION (P) LTD., என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் எண். 3300143603 நாள்.08.03.2019 தொகை ரூ.25,771 (இருபத்தி ஐந்து ஆயிரத்தி ஏழநூற்றி எழுபத்தி ஒரு ரூபாய் மட்டும்) மேற்காண் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:-
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /2019/இ1

பொருள்–**367**

திருத்தங்கல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2015-16 நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.38984/P1/2014 நாள்.5.11.2015-ன் படி ரூ.292.25 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ந.க.எண்.41,42,43,44,45,46,47,48 2015-2016 நாள்.11.01.2016-ன் படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 05.02.2016 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்படி பணிகளுக்கான வேலை உத்திரவு 19.02.2016-ம் தேதியன்று ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இவற்றில் ரூ.2.95 (இரண்டு இலட்சத்தி தொந்நூற்றி ஐந்தாயிரம்) ரூபாய் மதிப்பிலான IEC பணிகள் மற்றும் ரூ.24.00 (இருபத்தி நான்கு இலட்சம்) ரூபாய் மதிப்பீட்டில் கைவண்டிகள் (Push Cart) கொள்முதல் செய்யும் பணியில் ரூ.6.66 (ஆறு இலட்சத்தி அறுபத்தி ஆறாயிரம்) ரூபாய் ஆக மொத்தம் ரூ.9.61 (ஆறு இலட்சத்தி அறுபத்தி ஒராயிரம்) ரூபாய் மதிப்பிலான பணிகள் முடிக்கப்பெற்று அதற்கு மட்டுமே செலவுகள் செய்யப்பட்டுள்ளது. இவைகள் தவிர பிற திடக்கழிவு பணிகளை ஆணைக்குட்டம் பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமான இடம் சர்வே எண்கள். 503,510,511/1A,509,607/B-ல் பணிகள் துவங்க முற்பட்ட போது அதே பகுதியைச் சார்ந்த திரு.சீனிவாசன் என்பவரால் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு (எண்.W.P.M.D 7494/2015) தொடரப்பட்டு தற்சமயம் வரை நிலுவையில் உள்ளது. எனவே மேற்படி திடக்கழிவு பணிகளை கைவிடும் பொருட்டு ரூ.30.00 மதிப்பிலான Resource Recovery Centre அமைக்கும் பணி நீங்கலாக மேற்படி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:-
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.155/2013/இ1

பொருள்–**368**

திருத்தங்கல் நகராட்சி - பொறியியற் பிரிவு இணைதள மோடம் - 232368 பழுதாகிவிட்ட காரணத்தினால் புதிய மோடம் 1 எண்ணம் மட்டும் வாங்கி பயன்படுத்திக் கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2500/- (இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாய் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2124/2019/இ1

பொருள்–369

இந்நகராட்சி பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த டெங்கு காய்சசல் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் வாங்க 20/09/2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) பயனீர் டூல்ஸ் அண்ட்டு ஹார்டுவேர்ஸ், திருச்சி – ரூ. 700/– எண்ணம்
2) பைரோடெக் பிளேட்ஸ் சிவகாசி – ரூ. 6,50/– எண்ணம்

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S. பைரோடெக் பிளேட்ஸ் சிவகாசி என்ற நிறுவனம் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2177/2019/எச்1

பொருள்–370

இந்நகராட்சி பொது சுகாதரப்பிரிவு பணியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்களுக்கு Rain coat வாங்க 21/09/2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) சிட்டி டிரேடர்ஸ் அருப்புக்கோட்டை – ரூ. 2800/எண்ணம்
2) Virudhunagar District Multipurpose
3) Development society Aruppukottai – ரூ. 2600/எண்ணம்

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S. Virudhunagar District MultipurposeDevelopment society Aruppukottai என்ற நிறுவனம் மூலம் Rain coat வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் பணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2200/2019/எச்1

பொருள்–371

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் ( General Fund 2019-2020 ) திட்டத்தின் கீழ் 25.09.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 5 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | M.கண்ணன் | 0.07% குறைவு |
| | | | P.முருகன் | 0.25% குறைவு |
| 2 | வார்டு எண் 6 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | M.கண்ணன் | 0.07% குறைவு |
| | | | P.முருகன் | 0.25% குறைவு |
| 3 | வார்டு எண் 11 முதல் 15 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 | M.கண்ணன் | 0.07% குறைவு |
| | | | P.முருகன் | 0.25% குறைவு |
| 4 | வார்டு எண் 16 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது | 10.00 | M.கண்ணன் | 0.07% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | | | |
| | | | P.முருகன் | 0.25% குறைவு |
| 5 | வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 | M.கண்ணன் | 0.03% குறைவு |
| | | | P.முருகன் | 0.06% குறைவு |
| 6 | வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 1000 | M.கண்ணன் | 0.03% குறைவு |
| | | | P.முருகன் | 0.06% குறைவு |
| 7 | வார்டு எண் 15 முதல் 21 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 | M.கண்ணன் | 0.03% குறைவு |
| | | | P.முருகன் | 0.06% குறைவு |
| 8 | வார்டு எண் 18 சுக்கிரவார்பட்டி ரோடு உருண்டை பாறை அருகில் கூடுதலாக குடிநீர் குழாய் பதிக்கும் பணி | 3.50 | M.கண்ணன் | 7.77% கூடுதல் |
| | | | P.முருகன் | 1.55% குறைவு |

மேற்காண் அட்டவணை வரிசை எண். 1 முதல் 8 எண்ணம் உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்காண் அட்டவணை வரிசை எண்.1,2,3,4 ஆகிய பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.25% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு. P.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 5,6,7-ல் உள்ள பணிக்களுக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.06% குறைவு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு**. P.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 8-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 1.55% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **P.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 199/இ1/2019

பொருள்–372

திருத்தங்கல் நகராட்சி 2016-17 தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3 சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்தங்கல் நகராட்சியில் நகர்மன்ற தீர்மானம் எண். 2354 நாள்.08.07.2016-ன் படி மூன்று வேலைகள் பணி ரூ.10,00,000/- வீதம் 3 பணிகள் ரூ.30,00,000/- எடுக்கப்பட்டு நகர்மன்ற அனுமதி பெற்று முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதில் வார்டு எண். 2 ஓதுவார்சந்து பெண்கள் சுகாதார வளாகம் பணி முழுமையாக நடைப்பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டு விட்டது. மற்ற 2 பணிகள் நடைப்பெறுவதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் பணி நடைப்பெற இயலவில்லை. எனவே 2 பணிகளையும் ரத்து செய்து அரசு ஒதுக்கிய நிதியை திரும்ப ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.63/2016/இ1
பொருள்–373

திருத்தங்கல் நகராட்சி IUDM குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2013-14 நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.580 நாள்.21.11.2019-ன் படி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 9 எண்ணம் குடிநீர் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.365.00 இலட்சத்தில் IUDM திட்டத்தின் பங்குத் தொகை ரூ.328.50 இலட்சம் மற்றும் இந்நகராட்சி பங்குத் தொகை ரூ.36.50 இலட்சத்தில் குடிநீர் பணிகள் மேற்கொள்ள

நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து மேற்படி பணிகளை மேற்கொள்ள 11.02.2014-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 21.02.2014-ம் தேதியன்று மேற்படி 9 எண்ணம் பணிகளுக்கான வேலை உத்தரவுகள் வழங்கப்பட்டது. இவற்றில் 8 எண்ணம் குடிநீர் பணிகள் முடிக்கப்பெற்று ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டு தற்சமயம் வரை பயன்பாட்டில் உள்ளது. இதில் 1 எண்ணம் பணியான நகராட்சி அலுவலகத்திற்கு எதிரில் சிவகாசி - விருதுநகர் மெயின் ரோட்டில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் பணி தொடங்க முற்பட்ட போது திருத்தங்கல் நகராட்சி பகுதியைச் சார்ந்த திரு.R.வீராசாமி என்பவர் மேற்காண் குடிநீர் பணிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு (எண்.W.P)MD) No.20487/2016) தொடர்ந்து மேற்படி வழக்கானது தற்சமயம் வரை நிலுவையில் உள்ளது. மேலும் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மேற்காண் குடிநீர் பணியை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவுவதால் மேற்காண் திட்டப்பணியினை கைவிடவும் மேற்படி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியினை ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.122/2013/இ1
பொருள்–**374**

இந்நகராட்சி பகுதியில் **55** தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வருகிறது. அவர்களுக்கு EPF தொகை DD வரைவோலையாக EPF மண்டல அலுவலகம் மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது. துற்சமயம் **26/09/2019**ல் நடைப்பெற்ற ஆய்வு கூட்டத்தில் இனி வரும் காலங்களில் ஏதேனும் ஒரு consultacy மூலமாக பணியாளர்களுக்கு Challan :முலமாக online :மூலம் பதிவேற்றம் செய்ய தெரிவித்துள்ளனர். JKS Consultancy சிவகாசி என்ற நிறுவனம் மூலம் online பதிவேற்றம் செய்ய கடிதம் அளித்துள்ளார்.

எனவே இனி வரும் காலங்களில் EPF பங்கு தொகையை M/S. JKS Consultecy சிவகாவி என்ற நிறுவனம் மூலம் EPF பங்கு தொகை செலுத்தவும் அதற்கான செலவினம் மாதந்தோறும் ரூ. **3000/–** JKS Consultecy சிவகாசி என்ற நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்./2019/எச்1**

பொருள்–**375**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதியில் கொசு ஒழிப்பு பணியினை அபேட் மருந்து ஊற்றுதல், புகை மருந்து அடித்தல் மற்றும் தண்ணீர் தேங்க கூடிய தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை **55** தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் மூலம் அமுத சுரபி என்ற மகளிர் சுயஉதவி குழு மூலம் மேற்கொண்டு வருகின்றனர். தற்சமயம் மேற்படி குழு மூலம் தொடர்ந்து இப்பணியினை செய்ய இயலவில்லை என கடிதம் அளித்துள்ளனர். எனவே இனி வரும் காலங்களில் அதாவது **01/10/2019** முதல் **31/03/2020** வரை கொசு ஒழிப்பு பணியினை புன்னகை மகளிர் மன்றம் மூலம் **55** தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.802/2019/எச்1)**

ஆணையாளர்/தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி